செ.வெ. எண்: 214 நாள்: 21.03.2012

பத்திரிகை செய்தி

ஏழை எளிய மக்களுக்கு முற்றிலுமாக உணவு பாதுகாப்பு அளிக்கும் வகையிலும், பசிப்பிணியை அவர்களது வாழ்வில் அறவே அகற்றவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் ஆணையிட்டு 01.06.2011 முதல் பொது விநியோகத்திட்டத்தின் கீழ் விலையில்லா அரிசி இம்மாநிலத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் ஒவ்வொரு மாதமும் 1.84 கோடி குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்து வருகின்றனர்.

பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசி, மான்ய விலையில் கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு மற்றும் செறிவூட்டப்பட்ட பாமாயில் ஆகியவை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக ஆண்டொன்றுக்கு மானியமாக ரூ.4900 கோடியை செலவினமாக மாநில அரசு ஏற்றுள்ளது.

மானிய விலையில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை சுய லாபத்திற்காக பதுக்கி கடத்தும் சமூக விரோத சக்திகள் மீது மிகக் கடுமையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. கைது, தடுப்பு காவல் போன்ற கடுமையான நடவடிக்கைகள் விளைவாக இம்மாநிலத்தில் பொது விநியோகத் திட்ட அத்தியாவசியப் பொருள்கள் பதுக்கல், கடத்தல் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கிடங்குகள் மற்றும் நியாயவிலை அங்காடிகளின் செயல்பாடுகளை இரகசியமாக கண்காணித்து முறைகேடுகளில் ஈடுபடும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக அரவை முகவர்கள் பொது விநியோகத் திட்ட அரிசியை சுழற்சி முறையில் அரவை செய்த அரிசி போல வழங்குவதை முற்றிலுமாக தடுக்கும் வகையில் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

நியாயவிலை அங்காடிகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தரமான பொருள்கள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டியது அலுவலர்களின் தலையாய கடமையாகும். தரமற்ற பொருள்கள் ஏதும் இருப்பதாக தெரியவந்தால் அவை உடனடியாக கிடங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டு தரமான பொருள்கள் வழங்கப்படுகின்றன.

குடும்ப அட்டைதாரர்களுக்கு சரியான எடையில் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்பட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

நியாயவிலை அங்காடிகள் குறி.த நேரத்தில் திறக்கப்பட்டு வேலை நேரத்தில் செயல்படுவதை அனைத்து அலுவலர்களும் கண்காணிப்பதுடன் அனைத்து அத்தியாவசியப் பொருள்களும் நியாயவிலை அங்காடியில் இருப்பு வைக்கப்படுவதையும், அவைகள் முறையாக குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகிக்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

31.12.2011 அன்று புழக்கத்தில் இருந்த குடும்ப அட்டைகளை நியாயவிலை அங்காடிகளில் புதுப்பிக்கும் பணி 01.01.2012 முதல் 28.02.2012 வரை மேற்கொள்ளப்பட்டது. 1.93 கோடி குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. வயதானவர்கள், உடல் நலம் குறைந்தவர்கள் மற்றும் வெளியூர் சென்றுள்ளதன் காரணமாக நியாயவிலை அங்காடிக்கு வர முடியாதவர்கள் பயனடையும் வகையில்

ஆன்லைன் முறையில் 31.03.2012 வரை குடும்ப அட்டைகளை புதுப்பிக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதுவரை ஆன்லைன் மூலம் 54,573 குடும்ப அட்டைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

பொது விநியோகத்திட்டம் குறித்த புகார்களை பொதுமக்கள் நியாயவிலை அங்காடிகளில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர், இணைப்பதிவாளர், மாவட்ட வழங்கல் அலுவலர் ஆகியோருக்கும் மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையர் அலுலவகத்தில் செயல்படும் மாநில நுகர்வோர் சேவை மையத்திற்கும் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் தெரிவிக்கலாம். அவைகளின் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படும்

1) 044–28592828
2) 72 9999 8002
3) 86 8001 8002
4) 72 0001 8001
5) 94 4546 4748
6) 72 9900 8002
7) 86 8002 8003
8) 72 0004 8002

சோப்பு போன்ற பொருள்கள் வாங்கினால்தான் பொது விநியோகத் திட்ட பொருள்கள் கிடைக்கும் என்பது போன்ற வதந்திகள் வேண்டுமென்ற திட்டமிட்டு சிலரால் பரப்பப்படுகின்றன. பொது விநியோகத்திட்டத்தில் பொருள்களை பெறுவதற்கு இம்மாதிரியான கட்டாயங்கள் ஏதுமில்லை.

" விலையில்லாத அரிசியை தடையின்றி பொது மக்களுக்கு வழங்க வேண்டும் என்று தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்களின் பணி ஆய்வு கூட்டம் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு ஆர். காமராஜ் அவர்கள் தலைமையில் இன்று (21.03.2012) எழிலகம் கட்டிடத்தில், நான்காவது தளத்தில் உள்ள உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூட்ட அரங்கில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

1. திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப.,
   அரசு செயலாளர்,
   கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை
2. திரு பெ.மு.பஷீர் அஹமது, இ.ஆ.ப.,
   ஆணையாளர்,
   உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை
3. முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப.,
   நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
4. அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**